

முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட திலீப் குமார் ராஜகண்ணப்பன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி தலைவருமான டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினரும், மருத்துவர் அணி மாநில செயலாளருமான டாக்டர் எழிலன் ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடிகாங்கேய நல்லூரில் அமைந்துள்ள திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் 119வதுபிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரது உருவசிலைக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்பு லட்சுமி, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழுதலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு:

# 16 முருகனடியார்களின் பெயர்களில் விருதுகள்!

## உயர்நீதிமன்ற நீதியரசர் பி.வேல்முருகன் வழங்கினார்!

பழனி, ஆக.27-

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இரண்டு நாட்களாக கோலாகலமாக நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் (25.08.2024) நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி யில் அமைச்சர் பெருமக்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.சுரேஷ்குமார் அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டு சிறப்புரையாற்றுகையில் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான நிகழ்வை தமிழ் மண்ணிலே அரங்கேற்றிய தமிழ்நாடு அரசுக்கும், இந்து சமய அறநிலையத்துறைக்கும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, யாமிருக்க பயமேன் என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி திருமதி சுசித்ரா பாலசுப்ரமணியம் குழுவினர், இசைப்பேரரசி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், கந்தன் கருணை அமுதம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் கந்தன் பாடல்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிறைவாக, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிறைவு விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசி வழங்கினார். பின்னர், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பி.வேல்முருகன் அவர்கள் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் 16 நபர்களுக்கு பொற்பதக்கம், சான்றிதழ், பொன்னாடை மற்றும் பழனியாண்டவர் திருக்கோயில் பிரசாதம் போன்றவற்றை வழங்கி சிறப்பித்தார்.

போகர் சித்தர் விருதினை மருத்துவர் கு.சிவராமன், நக்கீரர் விருதினை முனைவர் பெ.சுப்பிரமணியம், அருணகிரிநாதர் இயல் விருதினை திருப்புகழ் மதிவண்ணன், அருணகிரிநாதர் இசை விருதினை வி.சம்பந்தம் குருக்கள், முருகம்மையார் விருதினை மறவன்புலவு க.சச்சிதானந்தன், குமரகுருபர சுவாமிகள் விருதினை முனைவர் பனசை மூர்த்தி, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் விருதினை பா.மாசிலாமணி, பகழிக் கூத்தர் விருதினை ஜெ.கனகராஜ் , கந்தபுராணக் கட்சியப்பர் விருதினை மருத்துவர் வ. ஜெயபாலன் , வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் விருதினை முனைவர் ந. சொக்கலிங்கம் , மாம்பழக் கவிச்சிங்க நாவலர் விருதினை முனைவர் புலவர் அமுதன் , சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் விருதினை முனைவர் சே.பார்த்த சாரதி, பாம்பன் சுவாமிகள் விருதினை தா.சந்திரசேகரன், தணிகைமணி வா.சு.செங்கல்வராயர் விருதினை முனைவர் வ.வெ.சசிவல்லி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விருதினை பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம், தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கனார் விருதினை மா. திருநாவுக்கரசர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இம்மாநாட்டில் 21 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பி.வேல்முருகன், பி.புகழேந்தி, வி.சிவஞானம், ஓய்வு பெற்ற நீதியரசர்கள் வி. பாரதிதாசன், ஆர். பொங்கியப்பன், சொக்கலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் மு.பெ.சத்தியவேல் முருகனார், சுகிசிவம், திருமதி தேச மங்கையர்க்கரசி, திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, ஆக. 27-

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில், தி.மு.க கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., மாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர், ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் எண் 225, சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் வேப்பூர் வி.பி. பேலஸில், நடைபெறுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றியச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் , ஊர்கிளை, உட்கிளை, வட்ட கிளைச் செயலாளர்கள், பி.எல்.ஏ. 2 மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள் : செப்டம்பர் மாதம் நடைபெறும் கழக முப்பெரும் விழா,
ஒன்றிய, நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம், அணிகளின் நிர்வாகிகள் நியமித்தல், கழக ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆர். காந்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மூத்த பத்திரிகையாளர் கோவி லெனின் தலைமை! சீதை பதிப்பகம் வழங்கும்

# ‘இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்’ நூல்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் வெளியிட டி.கே.எஸ்.இளங்கோவன் பெறுகிறார்!

சென்னை, ஆக. 27-

சீதை பதிக்கம் வழங்கும் “இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்” நூல் வெளியீட்டு விழா 31.8.2024 - சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சென்னை 18, அன்பகம், அண்ணா மன்றத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மூத்த பத்திரிகையாளர் கோவி - லெனின் தலைமை வகிக்கிறார். கௌரா ராஜசேகரன் வரவேற்கிறார்.

இந்நூலை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் வெளியிட முதல் நூலை முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன் பெற்றுக்கொள்கிறார்.

மூத்த பத்திரிகையாளர் தோழர் இந்திர குமார் நூலை ஆய்வு செய்து சிறப்புரையாற்றுகிறார்.

திருவாரூர் அர.திருவிடம் ஏற்புரையாற்றுகிறார்.

கௌரா ஜெய்கணேஷ் நன்றி கூறுகிறார்.




தேனி வடக்கு மாவட்டம் போடி நகர கழக சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு நகரச் செயலாளர் புருஷோத்தமன் தலைமையில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சிறப்புரை யாற்றினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராசிசெந்தில், முருகன், கண்ணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜா, ரமேஷ், செயற்குழு உறுப்பினர் சங்கர், நகர மன்றத் தலைவர் ராஜலட்சுமி, சங்கர், கலை இலக்கிய மாவட்ட அமைப்பாளர் நம்பிக்கை நாகராஜ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. இளைஞர் அணி சார்பில் – புதுச்சேரியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி! இரா.சிவா தலைமை!

## 300 மாணவ, மாணவியர்கள் பங்கேற்பு!

புதுச்சேரி, ஆக. 27-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைக் தேர்வு செய்யும் பொருட்டு, தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மாவட்டம்தோறும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி புஸ்சி வீதியில் உள்ள ரோஷ்மா திருமண நிலையத்தில் நேற்று (26.08.2024) காலை 9.00 மணிக்கு தொடங்கியது.

இப்போட்டிக்கு வருகை புரிந்தவர்களை மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல், சம்பத், எம்.எல்.ஏ., வரவேற்று பேசினார்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, போட்டியை துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கினார்.

மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் தொகுத்து வழங்கினார்.

இந்த போட்டியில் புதுச்சேரியில் உள்ள பல்வேறு அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் 300 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட, கலைஞரின் “என் உயிரினும் மேலான”..! என்ற தலைப்பில் தொடங்கி, என்றென்றும் பெரியார். ஏன்?., அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை, சுயமரி யாதைக்காரரர் கலைஞர், கலைஞர் - நவீன நாட்டின் சிற்பி, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதிக் காவலர் கலைஞர், பேசி வென்ற இயக்கம்,திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு குடும்பங்களில் தி.மு.க., போன்ற தலைப்புகளில் பேசி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

இந்த பேச்சுப் போட்டிக்கு தலைமைக் கழக மேலிடப் பார்வையாளராக மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் க. பிரபு அவர்களும், செய்தி தொடர்பாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பத்மபிரியா, கந்திலி கரிகாலன், பிரகதீஸ்வரன், அருள்எழிலன், ஆடுதுரை உத்ராபதி ஆகியோர் நடுவர்களாக இருந்து போட்டியை வழிநடத்தினர்.

இப்போட்டியில் பங்கேற்ற முதல் 22 மாணவர்களுக்கு இளைஞர் அணி சார்பில், ரூ.10 ஆயிரம் பண முடிப்பு, சான்றிதழ், பரிசுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இப்போட்டியில், தேர்வு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்கள் தமிழ்நாடு அளவில் நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பும், தமிழ்நாடு முதல்வர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கையாள் கலைஞர் நூற்றாண்டு கோப்பை மற்றும் பரிசுகள் பெறும் வாய்ப்பையும் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பேச்சுப் போட்டியை மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் ரோ. நித்திஷ், அ.முகிலன், தாமரைக்கண்ணன், ரெமிஎட்வின், உத்தமன், கிருபாசங்கர், அகிலன், சந்துரு, தமிழ்ப்பிரியன், பஜிலுதீன் ஆகியோர் செய்திருந்தனர்.


இந்த நிகழ்ச்சியில், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, சண். குமரவேல், லோகையன், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், பிரபாகரன், தங்கவேலு, செந்தில்குமார், அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன், திராவிடமணி, சக்திவேல், வடிவேல், ஆறுமுகம், ராதாகிருஷ்ணன், அணி அமைப்பாளர்கள் எஸ்.பி. மணிமாறன், சீனு மோகன் தாசு, காயத்ரி ஸ்ரீகாந்த், செந்தில்முருகன், டாக்டர் ஆனந்த் ஆரோக்கியராஜ், முகிலன், வீரய்யன், சிறப்பு அழைப்பாளர்கள் புதுவை தமிழ்சங்க முன்னாள் செயலாளர் பொறிஞர் மு. பாலசுப்ரமணியம், சீனு. வேணுகோபால், கலைமாமணி வேல்முருகன், கோவிந்தராசு, தமிழ்மணி, பாவலர் உசேன், கார்த்திகேயன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மாணவர்களின் பேச்சுத் திறனை கண்டு மகிழ்ந்தனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் மதுரை வேட்பாளராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சு.வெங்கடேசன் எம்.பி., மாபெரும் வெற்றியடைந்ததை அடுத்து மதுரை வடக்கு தொகுதி செல்லூர் பகுதியில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள் மூவேந்திரன், செல்லூர் குறும்பன், எம்.ஜி.முத்து, கணேஷ், இளைஞர் அணி சௌந்தர்ராஜன், செல்லூர் அறிவு நிதி எஸ்.வி.சுதன், காவேரி, ராதாகிருஷ்ணன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர். ராமதாஸ்
### ஆகஸ்ட் 27 (2016)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**